Registered No. M 5068

# ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப்பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி ஆனிமீ 22உ 5—7—1948 ஹிஜிரி 1367 ஷாபான்மீ 27உ திங்கட்கிழமை. } இதழ் 24

## ஐக்கிய முன்னேற்ற மஹாநாட்டில் டாக்டர் சையத் மஹ்மூத்.

### முஸ்லிம்களின் சரியான வழி.

### ஆசியத் தலைமை.

இந்தியா ஆசியாவின் இயற்கைத் தலைவன். ஆறு கோடி இந்தோனேஷ்ய முஸ்லிம்கள் மேற்கு ஆசிய, வட ஆப்பிரிக்க இஸ்லாமிய நாடுகள் இந்தியாவையே எதிர்பார்க்கின்றன இந்தியாவுக்கு அனுப்பிய தூது கோஷ்டி மூலம் டிரான்ஸ் ஜார்டன் மன்னர் அப்துல்லாவும் இச்செய்தியை அனுப்பினர். இந்தியா பாகிஸ்தான் கூட்டு பாதுகாப்பு ஏற்பட்டுவிட்டால் உருவாகவிருக்கும் ஆசிய நாடுகளின் பெடரேஷன் இந்தியாவை தலைவனாக ஏற்குமென்பது நிச்சயம். அவ்வித பெருமைக்கு இந்தியா இயற்கையாகவே உரிமைபெற்றிருக்கிறது. இந்தியா பாகிஸ்தான் ஒன்றுபட்டு உலக சமாதானத்தைப் பாதுகாக்க முடியும். உடைந்த உள்ளத்திலிருந்து பிறக்கும் என்னுடைய பலஹீனமான குரல் காரச்சியில் கேட்க முடியுமானால் தன்னுடைய கூட்டு பாதுகாப்பு யோஜனையை நடைமுறையில் கொண்டுவர காய்தே ஆஜமை தூண்டக் கூடுமானால் நமக்கும் பாகிஸ்தானுக்கும் இருந்துவரும் சகல துன்பங்களும் மறைந்தே போகும்.

ஆசிய நாடுகள் பெடரேஷன் உருவாகி இந்தியா அதற்குத் தலைமை தாங்குவதால் வெள்ளையர்கள் கிளப்பிவிட்ட பெரும்பான்மை பயம் முஸ்லிம்களை விட்டு நீங்குவதுடன் ஆசிய, வட ஆப்பிரிக்க தலைவன் என்ற முறையில் இந்தியா விடுக்கும் சமாதானக்குரலை ஐரோப்பிய அமெரிக்க நாடுகள் அலட்சியம் செய்துவிட முடியாது. அதற்காக இந்தியா பாகிஸ்தான் கூட்டுப் பாதுகாப்பு பிரச்னை முதலில் தீர்க்கப்படவேண்டும். அடுத்தபடியாக கூட்டு வெளிநாட்டுக் கொள்கை தவிர்க்க முடியாததாகிவிடும் அதன் பிறகு இந்தியா பாகிஸ்தான் நாடுகள் தலைநிமிர்ந்து நின்று முழு பலத்துடன் அமைதியையும், அஹிம்ஸையையும் உலகுக்கு எடுத்தோத முடியும்.

அன்பு அமைதியை நிலைநாட்டி திருகுர்ஆன் விடுக்கும் தூதை நீங்கள் உலகுக்கு அறிவிக்க வேண்டும். சமாதான ஐக்கிய மனோபாவத்துடன் எந்த அளவுக்கு சேர்ந்துவாழ முடியுமென்பதை இந்நாட்டுக்கு செய்திருக்கும் ஆயிர வருஷ சேவையின் மூலம் முஸ்லிம்கள் நிரூபித்துக் காட்டியிருக்கின்றனர். அதைப் போலவே இனியும் நீங்கள் நடந்துக் கொள்வது சாத்தியமில்லையா ?

இன்றைக்கும் உங்களுடைய சோஷியல் வாழ்க்கை முறை உலகில் பரவி வருகிறது. பெண்களுக்கு சம உரிமை வழங்க உலகம் ஒப்புக்கொண்டுவிட்டது. திருகுர்ஆன் போதிக்கும் சகோதரத்துவம் இந்தியாவில் வளர்ந்து வருவதுடன் தூர உறவினர்களுக்கும் பெண்களுக்கும் சொத்துரிமை கொடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை முஸ்லிமல்லாத தலைவர்களும் உணர்ந்துவிட்டனர். முஸ்லிம்களின் சகவாசத்தால் நாளுக்குநாள் தீண்டாமை ஒழிந்து கொண்டிருக்கின்றது. ஆயினும் துரதிர்ஷ்ட வசமாக முஸ்லிம்களே தங்கள் கொள்கைகளை அனுசரித்து நடப்பதில்லை. இன்றைக்கும் திருகுர்ஆனையும் இஸ்லாமையும் பின்பற்றி நடப்பதால் முஸ்லிம்கள் வெற்றியடையமுடியும்.

கவுன்ஸில், சட்டசபை பதவிகள் உத்தியோகங்களின் மோகச் சுழலில் சிக்கவேண்டாம். உங்களில் பதவிகளுக்காகக் கெஞ்சுபவர்களுக்கே அதை விட்டு விடுங்கள் ஜாதீய சச்சரவுகள் ஒழிக்கப்படவேண்டும். ஜாதீய பாகுபாட்டின் சாபக்கேட்டை ஒழிக்க புத்தர் முதல் காந்திஜி வரை முயற்சிகள் நடந்திருக்கின்றன. அதன் பயனாக ஹிந்து சகோதரர்கள் இன்று களைந் தெரியும் ஜாதீய தளைகளை எடுத்து நீங்கள் கழுத்தில் போட்டுக்கொள்ள வேண்டாம். உயர்ந்தவன் தாழ்ந்தவன் உங்களில் கிடையாது. ஒழுக்கம் மிகுந்தவனே உயர்ந்தவன் என்ற திரு குர்ஆனின் போதனையை மறந்து விடாதீர்கள்.

## சரியான வழி.

நாம் செய்யவேண்டியதுதான் என்ன ? என்று நீங்கள் கேட்கலாம். உங்களுக்காக தீர்க்காலோசனைக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வந்துள்ளேன். அதை உங்களுக்கு சிபார்சு செய்கிறேன்.

1. ஆண்டவனை நம்பி தன்னம்பிக்கையுடன் வாழ கற்றுக் கொள்ளுங்கள்.

2. அவநம்பிக்கை, சோர்வு, பயம், ஏமாற்றத்தை அகற்றுங்கள்.

3. உங்கள் மீது ஹிந்து சகோதரர்களுக்கு ஏற்பட்டுவிட்ட அவநம்பிக்கையை போக்குங்கள். ஹிந்துக்கள் உங்கள்மீது கொண்டிருந்த நம்பிக்கையை உங்களுடைய கடந்தகால பத்து வருஷ அரசியல் போக்கு போக்கிவிட்டது. இந்த நாட்டை உங்கள் நாடு என்றோ, ஹிந்துக்களை சகோதரர்கள் என்றோ நீங்கள் பாவிப்பதில்லையென்று ஹிந்துக்கள் நினைக்க ஆரம்பித்துவிட்டனர். அவ்வித எண்ணத்தைப்போக்க முயற்சிக்க வேண்டும். இந்தியா நம் முன்னோர்கள் நிர்மாணித்த நாடு ; ஹிந்துக்கள் நம் தேசிய சகோதரர்கள் ; அவர்களுடைய உயிர், உடமை, கௌரவத்தைக் காக்க நம்முடைய உயிர், உடமை, கௌரவத்தை அர்ப்பணிக்கத் தயார்; என்று செயலளவில் உலகுக்கு நிரூபித்துக் காட்டுங்கள்.

கடந்த 35 வருஷங்களாக ஹிந்துக்களுடன் சேர்ந்து வேலை செய்து வரும் நான் அவர்களுடைய குறைகளையும் சுட்டிக்காட்டத் தயங்கமாட்டேன். இருப்பினும் இங்கு முஸ்லிம்களைக் குறித்தே பேசுகிறேன். ஆகையால் அவர்களைப் பொருத்து பேசுவதே சரி. நம்முடைய பத்து வருஷங்களின் தவறான போக்கு ஹிந்துக்களின் மனதை புண்படுத்திவிட்டது. அதை உணர்ந்திருந்த என்னைப் போன்றவர்கள் ஹிந்துக்களின் மனவேதனையைப் போக்க முயன்று வந்தனர் நம் சமூகத்தினராலேயே வெறுக்கப் பட்டிருக்கையில் நம்முடைய முயற்சிகள் எவ்விதம் பலனளிக்க முடியும். சுதந்திரத்துக்காக ஒன்றுபடவேண்டுமென்ற ஒரே நம்பிக்கையில் பலவித துன்பங்களை சகித்தோம். அன்னியர்களின் பேச்சுக்கு இலக்காகி நம் முஸ்லிம் சகோதரர்களே நம்மை எதிர்த்து வந்தனர். நெருக்கடியான இன்றைய நிலைமையிலும்கூட யாரையும் திருப்தி செய்யும் விதத்தில் பேச நான் தயாரில்லை. ஹிந்துக்களின் தவறுகளையும் கண்டிக்கிறோம். ஆயினும் முஸ்லிம்களின் போக்கால் ஹிந்துக்களுக்கு மனவேதனை ஏற்படக் காரணமில்லையென்று சொல்லுவது நியாயத்தை கொலைசெய்வதாகும் அதனால் ஹிந்துக்களும், காங்கிரஸும் தவறே செய்யவில்லை யென்று அர்த்தமல்ல. எப்படியிருப்பினும் ஏற்பட்டுவிட்ட அவநம்பிக்கையை போக்குவதே நம் முதல் வேலை. செய்கையின் மூலமே அது சாத்தியம்.

அரசர்களாயிருந்த நம் மூதாதையர் ஹிந்துக்களை சகோதரர்களாகவே பாவித்து வந்தனர். அவர்களுடைய கலாச்சாரத்தை மெச்சி அவர்களின் கல்வியையும் கற்றிருக்கின்றனர். முஸ்லிம்களில் அநேகர் ஹிந்தியில் பெரும் கவிகளாகப் பிரகாசித்து ஹிந்து முஸ்லிம்களின் ஐக்கிய நாகரீகத்துக்கு அடிகோலியிருக்கின்றனர். இன்று ஹிந்து முஸ்லிம்களின் ஐக்கிய நாகரீகம் மண்ணைத் தூவி மறைக்கப்படுகிறது. புழுதிக்குள் மறைந்திருக்கும் இந்திய நாகரீகம் திரும்பவும் பிரகாசிக்கப்போவது நிச்சயம். அதற்காக ஹிந்துக்களுக்கு ஏற்பட்டுவிட்ட அவநம்பிக்கையும் மனக்கசப்பும் முதலில் அகற்றப்படவேண்டும். நாம் இந்த நாட்டில் இருந்து வாழவேண்டியவர்களாக இருக்கிறோம். இதற்குமுன் வாழ்ந்ததைப் போலவே இனியும் ஹிந்துக்களுடன் சகோதரர்களாகவே வாழ முடியும். கடந்த பத்து வருஷங்களில் வெறுப்பும், நம்பிக்கையின்மையும் அதிகரித்து விட்டது. இன்று நாலைந்து மாதங்களே கழிந்திருக்கின்றன. நாம் பொறுமையுடன் பாடுபட்டால் கூடிய சீக்கிரம் அவநம்பிக்கையைப் போக்கிவிடலாம். அதற்கு சில காலம்தேவை. ஹிந்துக்கள் இழைத்த தவறுகளை மறைக்க நாம் விரும்பவில்லை. ஆயினும் அதைச் சொல்லிக்கொண்டிருப்பதால் இன்று பிரயோஜனம் ஏற்பட முடியாது.

நாம் அன்பைக்காட்டினால் ஹிந்துக்கள் நம்மை ஸ்தோத்திரம் செய்வர். தங்களுடன் அன்பாக நடப்பவர்களை ஹிந்துக்கள் ஸ்தோத்திரம் செய்து வந்திருப்பதற்கு சரித்திரமே சான்று. அக்பர்சக்ரவர்த்தி அன்பு காட்டினார் இன்றுவரை ஹிந்துக்கள் அக்பரை புகழ்கின்றனர். நீங்கள் பொறுமையுடனும் சகிப்புத்தன்மையுடனும் அவர்களை நோக்கி முன்னேறி

ஞல் அவர்கள் ஓடிவந்து ஆலிங்கனம் செய்துகொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

4. புதியமுறையில் நாம் நம்மை திருத்தியமைத்துக்கொண்டு நம்முடைய சமூக கலாச்சார வாழ்க்கையை செப்பனிடவேண்டும். மார்க்கத்தில் உறுதிகொண்டு பொறுமையுடனும் அமைதியுடனும் திரு குர்-ஆன் போதனைகளைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

5. நம் பொருளாதார நிலை உயரவேண்டும். தேசத்துக்கு ஒருசுமையாக இருக்குமளவுக்கு பொருளாதாரத்துறையில் நாம் க்ஷீணித்துவிட்டோம். நான்கு கோடி மக்களின் சக்தி சாதாரண சக்தியல்ல. நம்முடைய நிலைமை திருந்தாதவரை நாட்டின் நிலைமையும் திருந்த முடியாது. உங்களைவிட நல்ல நிலைமையிலிருக்கும் ஹிந்துக்கள் உங்களுக்காக என்ன செய்ய வேண்டும்; என்ன செய்து கொண்டிருக்கின்றனர் என்பது தனி விஷயம். பொருளாதாரத் துறையில் முன்னேற உங்களுடைய முயற்சி மிக அவசியம். நாலுகோடி மக்களுக்கு உணவு கிடைக்கவில்லையென்ருல் பத்து வருஷங்களுக்குப் பிறகு நம் முன்னேற்றத்தின் கதவு அடைக்கப்பட்டுவிடும். ஜமீன்தாரித்துவம் நம்மைப் பாழாக்கிவிட்டது. உழைப்பின்றி கிடைக்கும் உணவு வாழ்க்கைப் போராட்டத்தின் எதிர்ப்புகளை சமாளித்து வெற்றியடைவதற்கு வேண்டிய தைரியத்தையும், தகுதியையும் நம்மிடமிருந்து பிடுங்கிக்கொண்டுவிட்டது. இன்றைய துன்பங்களின் பின்னணியில் இயற்கை என்ன செய்யப்போகின்றதோ தெரியவில்லை. ஒருக்கால் இதை சாக்காகக்கொண்டு இயற்கை உங்களை முன்னேற்ற விரும்பியிருக்கக்கூடும். ஹிந்துக்கள் செயல் துறையில் பெற்றிருக்கும் ஓரளவு சக்தியைக் கொண்டு முன்னேறி விட்டனர். நாம் அவ்வித சக்தியைப் பெறுவதில் பங்கு கொள்ளவில்லை. முன்னேற்றமடைய வேண்டுமாயின் உறங்குவதைவிட்டு முன் நோக்கி ஓட வேண்டும். உள்ளங்களை உற்சாகப்படுத்துங்கள் திரு குர் ஆன் வாசியுங்கள். மௌலாஞ அபுல் சலாம் ஆஸாதின் மொழிபெயர்ப்பைப் பாருங்கள் அதன் மூலம் நீங்களே படித்து உணர்ந்து கொள்ள முடியும். தினம் ஒரு வாக்கியமே யாயினும் அதன் கருத்தை உணர்ந்து வாசியுங்கள்.

---

## திருத்தம்

சென்ற 28—6—48 இதழில் K. M ஷரீப் அவர்கள் 'நெல்லை ஜில்லா முஸ்லிம்கள் சகோதரர்களுக்கு ஓர் வேண்டுகோள்' என்ற தலைப்பில் விடுத்த வேண்டுகோளில் உள்ள '11—7—48' என்ற தேதியை '7—7—48' என்று திருத்தி வாசிக்கும்படி வாசகர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

சென்ற இதழ் தொடர்ச்சி.

## சோஷலிஸ்டுகள் விரும்புவது சமுதாய பொருளாதாரப் புரட்சியே.

அச்சுத பட்டவர்த்தன் விளக்கம்.

### சைஞவின் உதாரணம்.

தேசத்தின் பொருளாதார மேற்பார்வை நாளாவட்டத்தில் முதலாளிகளிடம் ஒப்படைக்கப்படுகிறது. சீனக் குடியரசின் சிற்பியான டாக்டர் சின்யித் சீனுக்கு நேர்மாருன கொள்கைகளுக்கு இதைப் போலவே கோலிங்டானும் இலக்காக நேர்ந்தது. தன்னந்தனியாக தான் இருப்பதைப் போன்ற ஒரு எண்ணம் மகாத்மா காந்திக்கு கடைசி காலத்தில் ஏற்பட்டிருந்தது. சைஞவில் நடந்ததும் அதுதான். அங்கும் பலமான எதிர்ப்பு கட்சி இருக்கவில்லை. இந்தியாவிலும் அது நிகழுமோ என்ற பயம் ஏற்பட்டிருக்கின்றது. காங்கிரஸ் வகிக்கும் ஸ்தானத்தை சோஷலிஸ்ட் கட்சி அபகரிக்க விரும்பவில்லை. ஆயினும் அரசியலை விட நாட்டின் ஒற்றுமையை பெரிதாக மதிப்பவர்கள் குறைகளையும் பல ஹீனங்களையும் சுட்டிக் காட்டவேண்டியதவசியம்.

### புதிய உறவு

பிரிட்டிஷ் ஆட்சியின் சாபக்கேடான அதிகாரமும் பயமும் என்பதற்கு பதிலாக சர்க்காருக்கும் பொதுமக்களுக்குமிடையே புதிய உறவை ஏற்படுத்துவதே சோஷலிஸ்ட் கட்சியின் நோக்கம். மக்களிடையே மக்கள் ஆட்சி என்று பாத்தியதை கொண்டாடியபோதிலும் கடந்த காலத்திற்கு மாறுபட்ட உணர்ச்சியை ஏற்படுத்த காங்கிரஸால் முடியவில்லை. பிரிட்டிஷ் முதலாளித்துவ ஆட்சி மக்கள் விருப்பத்தை பூர்த்தி செய்வதில் வெற்றி பெறவில்லை. இன்றைய போக்கு கடந்த காலத்தை நீடிப்பதேயாகும்.

### நாம் விரும்பும் உலகம்

அதிகாரம் மக்கள் கைக்கு மாறி மக்களின் விருப்பம் பூர்த்தியாகக் கூடிய ஒரு உலகத்தை நாம் கனவு காண்கிறோம். கிராம்வெல்லைப்போல் மக்களை சட்டங்களுக்கு அடிமையாக்குவதை வெறுக்கிறோம். நாம் கனவுகாணும் இந்தியாவை வெறும் சட்டங்கள் இயற்றி உருவாக்கிவிட முடியாது.

கடவுளைப்பற்றி நாம் பேசுவதில்லை. அப்படிப் பேசுபவர்களுக்கு கடவுளைப்பற்றி ஒன்றும் தெரியாது என்பது நமக்குத்தெரியும். சமுதாயப் புரட்சி ஒரு கட்சியின் வேலையல்ல. மதம் என்பதற்கு துன்பங்கள், தொல்லைகளின் குத்தகை உரிமை என்று அர்த்தமானல் சோஷலிஷ்டு கட்சி அவ்வித மதத்தை தூரத்திலிருந்தே நமஸ்கரிக்கின்றது. சோஷலிஸ்ட் கட்சியின் முடிவை புதிய சமுதாயப் புரட்சி எண்ணங்கள் ஆதரிக்கின்றன. இன்னும் அந்த எண்ணங்கள் பூர்த்தியாகவில்லை. கட்டுப்பாடில்லாத ஒரு கூட்டம் சோஷலிஸ்ட் கட்சி அல்ல. அவர்களுக்கு தங்களுடைய கொள்கைகளில் பூரண நம்பிக்கை உண்டு.

ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 5—7—'48 திங்கட்கிழமை { இதழ் 24

# நெல்லை ஜில்லா இடைத் தேர்தல்.

நம் கடந்த கால அரசியல் போக்கு தவறானதென்று அறிவுறுத்த வேண்டிய அவசியம் இனியுண்டா? இஸ்லாமுக்கு எதிரான இயற்கைக்கு மாறான கொள்கைகள் கோஷங்களின் வேதனையளிக்கத்தக்க விளைவுகள் வெளியாய்விட்டன சுருங்கச் சொல்லின் "எவ்வளவோ எச்சரித்தும் கேளாமல் முஸ்லிம்கள் அழிவுப்படுகுழியில் விழுந்துவிட்டனர்" என்றே சொல்லவேண்டும் ஆகஸ்ட் 14-ந் தேதி மாலை தெளிவுடன் காணப்பட்ட இந்திய முஸ்லிம் மறுநாட் காலை களையிழந்து பரிதாபக் காட்சியளித்தான. பத்துப் பதினைந்து வருஷங்களாக முஸ்லிம் லீகை ஆதரித்ததற்கு கிடைத்த பிரதிபலன் அதுதான். பிரிவினைக்குப் பிறகு நடந்த கலவரங்களால் முஸ்லிம்கள் அடைந்த நஷ்டத்துக்கு சரித்திரத்திலேயே நிகரில்லை. உயிரிழந்த பலலட்சம் நிரபராதிகளின் ஆத்மாக்கள் நமக்குச் சரியான வழி காட்டட்டும். கற்பழிக்கபபட்ட கணக்கிலடங்கா சகோதரிகள் வடிக்கும் கண்ணீர் நம் அறியாமையைப் போக்கட்டும். பொசுங்கிச் சாம்பலாய்க் குவிந்த கோடிக்கணக்கான ரூபாய் பொருமான செல்வம் நம்மை விழிப்புறச் செய்யட்டும். இனியாகிலும் இந்திய முஸல்மான்கள் நேர் வழியைப் பின்பற்றுவார்களா! தங்களுடைய மூதாதையரின் ஆயிரம் வருஷ சரித்திரப் பெருமையைக் காக்க முன்வருவார்களா! இஸ்லாமுக்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் ஏற்பட்டுவிட்ட களங்கத்தைப்போக்க முயற்சிப்பார்களா! இல்லையேல்! நமக்கு உலகத்தில் வாழ உரிமையில்லை பூமிக்கு பாரமாய் இருப்பதைவிட அழிவதே மேல் முஸ்லிம் லீகின் துவேஷப் பிரசாரம் இரண்டு சமுதாயக் கொள்கை தேசப் பிரிவினையைத் தவிர முஸ்லிம்களின் அழிவுக்கு வேறு காரணம் காட்ட முடியுமா? பன்னிரண்டு நூற்றாண்டுகளாக இந்தியர்களாய் இந்திய மக்களுடன் சகோதரர்களாய் வாழ்ந்து வந்த முஸ்லிம்களை தேசீய சகோதரர்களை விட்டு பிரித்தவர்கள் யார்? வேற்றுமையைப் புகுத்தி மதவெறியைத் தூண்டியவர்கள் எவர்? இன்றைக்கும் லீகர்கள் தேர்தலில் போட்டியிட முன்வந்திருப்பது அவர்களுடைய பதவி மோகத்தையும், கல் நெஞ்சத்தையுமே காட்டுகிறது. தேர்தலில் போட்டியிட ஓட்டுரிமையுள்ள ஒவ்வொரு முஸ்லிமுக்கும் சட்டப்படி உரிமையுண்டு. ஆனால் இந்தியாவைத் துண்டாடி முஸ்லிம்களை ஒன்றுக்கொன்று தொடர்பற்ற மூன்று கூறுகளாகச் சிதறடித்து பொதுவாக இந்தியர்களையும் குறிப்பாக முஸ்லிம்களையும் அழிவுப்படுகுழியில் தள்ளிய லீகர்களுக்கு தேர்தலில் போட்டியிட தர்ம நியாயப்படி உரிமையிருக்க முடியாது. அதிலும் பாகிஸ்தான் எங்கள் தாயகம் என்று கோஷித்தவர்கள் இந்தியத் தேர்தல்களில் அபேட்சகர்களாய் நிற்பது வெட்கமற்ற செய்கையாகும். அன்று லீக் தலைவர்கள் செய்த பிரசாரம் இதுவரை இந்திய முஸ்லிம் பொதுமக்களின் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்குமென்று நம்புகிறோம். மைனாரிடி முஸ்லிம்களுக்கு அவர்கள் அளித்த உறுதிகளெல்லாம் காற்றுவாக்கிலே பறந்தன. இஸ்லாமின் காவலாளிகளென்று மார்தட்டிக் கொண்டிருந்தவர்கள் ஆகஸ்ட் 15-க்குப் பிறகு மாயமாய் மறைந்தனர். பாகிஸ்தானில் பதவி கிடைக்காமல் பின்தங்கிவிட்ட லீக் தலைவர்கள் இருக்குமிடம் தெரியவில்லை. நடக்கத்தகாத காரியங்கள் கண்ணெதிரே நடந்தன ஆயினும் முஸ்லிம்களுக்காக பட்டயம் கட்டிக்கொண்டு பேசியவர்கள் வாய்திறக்கவில்லை. கண்டிக்க முன்வரவில்லை. இந்திய முஸ்லிம்கள் பெருமைப்படத்தக்க பன்னிரண்டு நூற்றாண்டுகளின் சரித்திரம் மூழ்கிக்கொண்டிருக்கிறது. அதைப் பாதுகாக்க ஒரு லீக் தலைவனையும் காணோம். பிரிவினையால் ஏற்படக்கூடிய விளைவுகளைக் குறித்து காங்கிரஸ் முஸ்லிம்கள் முன்கூட்டியே எச்சரித்து வந்திருக்கின்றனர். அவர்களுடைய எச்சரிக்கையைக் கேட்க லீக் தலைவர்கள் பொதுமக்களை அனுமதிக்கவில்லை. மிஸ்டர் ஜின்னாவும், லியாகத் அலிகான் போன்றவர்களும் இஸ்லாமின் பாதுகாப்பாளர்கள் என்றும் திரு குர் ஆனின் காவலாளிகளென்றும் பிரசாரம் நடந்தது. மௌலானா அபுல்கலாம் ஆஸாத், மௌலானா ஹுஸைன் அஹமத் மதனி போன்ற இஸ்லாமிய பண்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் பெரியார்களை காங்கிரஸ் கூலிகளென்றும், ஹிந்துக்களின் கையாட்களென்றும், பெயரிட்டழைத்தனர். ஒரு சமூகத்தின் இவ்வளவு பெரிய பாவத்தை மன்னித்து அவர்களுடைய தவறான போக்கை கண்டிக்காமல்விட இயற்கையால்

சாத்தியமில்லாது போயிற்று போலும். நேற்றுவரை இஸ்லாமிய விரோதிகள் என்று முஸ்லிம்களால் அழைக்கப்பட்டவர்கள்தான் இன்று மசூதிகளை மீட்கின்றனர். கடத்தப்பட்டு தீங்கிழைக்கப்பட்ட முஸ்லிம் பெண்மணிகளின் கண்ணீரைத் துடைக்கின்றனர். குடி பெயர்ந்த முஸ்லிம்களையும் பாகிஸ்தானுக்குச் சென்று ஒண்ட இடம் கிடைக்காமல் துன்பப்பட்டு திருப்பிவந்திருக்கும் லட்சக்கணக்கான அநாதைகளையும் மீண்டும் குடியேற்ற அரும்பாடுபடுகின்றனர். இஸ்லாமுக்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் முஸ்லிம்லீக் ஏற்படுத்திவிட்ட பெரும் களங்கத்தை போக்குவதில் முனைந்திருக்கின்றனர். நெருக்கடியான இக்கட்டத்தில் மதத்தின் பெயரால் ஓட்டுக்களைப் பெற்று பதவி ஆசனங்களில் உல்லாசமாய் ஆம்ராகணித்திருந்த லீக் தலைவர்கள் எங்கே? ஆயிரம் வருஷங்கள் வரை முஸ்லிம்களின் தலைநகராய் விளங்கிய டில்லி முஸ்லிம்களுக்கு கஷ்டகாலத்தில் லீக் தலைவர்கள் செய்த சேவை என்ன? நவகாளி எதிரொலிக்கு இலக்காகி அழிவுற்ற பீஹார் முஸ்லிம்களுக்கு அளித்த நிவாரணமென்ன? கிழக்கு பஞ்சாபில் முஸ்லிம்கள் அடைந்த அலங்கோலத்துக்கு பொறுப்பாளிகள் யார்? பத்து கோடி முஸ்லிம்களுக்காகப் பரிந்து பேசிய லீக் தலைவர்கள் என்ன செய்துகொண்டிருக்கின்றனர். பிரிவினைக்குப் பிறகாவது பாகிஸ்தானிலிருந்து முஸ்லிமல்லாதார் வெளியேறுவண்ணம் லீக் தலைவர்கள் நடந்துகொண்டிருந்தால் இந்திய முஸல்மான்களுக்கு இத்தனை துன்பங்கள் ஏற்பட்டிருக்க முடியாது. இதையெல்லாம் இந்திய முஸல்மான்கள் சிந்தித்துப்பார்க்காமல் லீக் பெயரால் இனியும் மயங்கப் போவதில்லை மேலும் சென்ற தேர்தலில் சென்னை சட்டசபையின் முஸ்லிம் சீட்டுகள் பூராவிலும் லீக் பிரதிநிதிகள் கைப்பற்றினார்கள். அதனால் மாகாண முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பிரயோஜனம்? பிரிவினைக்கு முன்பே ஒன்றும் செய்ய முடியாமல் சபைக்கு அலங்காரமாய் உட்கார்ந்திருந்த பொம்மைகள் இனி இந்தியாவில் சாதிக்கப்போவது ஒன்றுமில்லை. வேற்றுமைக்கும் பிடிவாதத்துக்கும் உபயோகிப்பதற்காக ஓட்டுரிமை அல்ல. ஜனநாயக நாட்டின் பிரகாசமான எதிர்காலத்தை உகந்தவகையில் ஓட்டுக் கொடுப்பதன்மூலம் உருவாக்கலாம். நம் கடந்த கால போக்கால் இன்னும் இந்தியர்கள் நம்மை சந்தேகிக்கின்றனர். சந்தேகத்தை நிவர்த்திக்க வேண்டிய பொறுப்பு நம்மைச் சார்ந்திருக்கிறது வேற்றுமை பேர்வழிகளுக்கு ஓட்டுக் கொடுப்பதன் மூலம் தேசிய சகோதரர்களின் சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்வது சரியல்ல. எனவே இனிவரும் தேர்தல்களில் ஒற்றுமைக்காக பாடுபடும் அபேட்சகர்களை ஆதரிப்பதன் மூலம் தேசிய சகோதரர்களுக்கு இருந்து வரும் சந்தேகத்தைப் போக்க வேண்டும். அவ்வித சந்தர்ப்பம் முதல் தடவையாக நெல்லை ஜில்லா முஸ்லிம்களுக்கு கிடைத்திருக்கிறது. நெல்லை ஜில்லா இடைத்தேர்தலுக்கு அபேட்சகராய் நிற்கும் தேசிய முஸ்லிம் V. S. T. முஹம்மது இப்ராஹீம் சாஹிபை ஒரு முஸ்லிம் லீகர் போட்டியிடுகின்றார். நெல்லை ஜில்லா முஸ்லிம்கள் இந்த சந்தர்ப்பத்தை பிரயோஜனப்படுத்திக் கொண்டு சுமுகமானதொரு சூழ்நிலையை ஏற்படுக்தமுடியும் காங்கிரஸ் முஸ்லிம் அபேட்சகரை ஆதரிப்பதன் மூலம் தங்களுடைய நல்லெண்ணத்தை எடுத்துக் காட்டுவார்களென்று நம்புகிறோம். 7—7—48-ல் நடக்கவிருக்கும் தேர்தலில் V S T. முஹம்மது இப்ராஹீம் சாஹிபை ஆதரித்து நீல நிறப்பெட்டியை ஓட்டுக்களால் நிரப்பும்படி கேட்டுக்கொள்கிறோம்.

# திருச்சி இளைஞர் காங்கிரஸ்.

## ஸ்ரீ என். கண்ணன் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திருச்சி, 23—6—48.

இன்று காலை திருச்சி டவுன் ஹாலில், திருச்சி இளைஞர் காங்கிரஸ் கூட்டம் ஸ்ரீ என். கண்ணன் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் புதிய வருஷத்திற்கு ஸ்ரீ என். கண்ணன் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார், ஸ்ரீ எஸ். நாராயணன், ஸ்ரீ எஸ். மோகன்முதலியோர் நேரு அரசாங்கத்தை பலப்படுத்த வேண்டுமென்றும், காந்தீயத்தை நாட்டில் பரப்ப வேண்டியதின் அவசியத்தையும் விளக்கி மாணவர்களுக்குராணுவப்பயிற்சி அளிக்கப்படவேண்டுமென்றும் கருப்பு மார்க்கட்டையும், லஞ்சத்தையும் ஒழிக்க இளைஞர்கள் சர்க்காருடன் ஒத்துழைக்க வேண்டுமென்றும் பேசினார்கள். பிறகு புது வருஷ காரியதரிசிகளாக ஸ்ரீ எஸ். நாராயணன் ஸ்ரீ R. மருதையும், பொக்கிஷதாரராக நாச்சிகுறிச்சி ரெங்கசாமி கோனாரும் 21 கமிட்டி மெம்பர்களும், தேர்ந்தெடுக்கப்பட்டனர்

எஸ் நாராயணன்

காரியதரிசி திருச்சி, இளைஞர் காங்கிரஸ்.

ஜெய் ஹிந்த் ! உ ஜெய் ஹிந்த் !!

# மணப்பாறை வரிகொடுப்போர் சங்கம், மணப்பாறை

சென்னை அரசாங்க பிரதம மந்திரி

## கனம் O. P. ராமசாமி ரெட்டியார் அவர்கள் திவ்ய சமூகத்துக்கு

மேன்மை தங்கிய ஐயா,

26—5—48-ல் மணப்பாறை முஸாபுரி பங்களாவில் திரு M. சின்னச்சாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் கூடிய பொதுக்கூட்டம்.

**தீர்மானம்:—**

திருச்சிராப்பள்ளி ஜில்லாவின் பெரிய வாரச் சந்தைகளாகிய மணப்பாறை, கால்நடை, சில்லரைச் சந்தைகளில் வரி வசூல்செய்யும் ஏலதார்கள் நெடுநாட்களாக ஜில்லா போர்டாரால் ஏற்படுத்தப்பட்ட வரி விகிதங்களுக்கு பல மடங்கு அதிகமாக வசூல் செய்துகொண்டு வருகிருர்கள். சென்ற 1947—48-ம் வருஷ சில்லரைச்சந்தை ஏலதாரராகிய, மணப்பாறை பஞ்சாயத்து போர்டு தலைவர், திரு. P. M. N. வெங்கிடுசாமி நாயுடு. ஏற்பட்ட வரி விகிதங்களுக்கு எட்டு மடங்கு அதிகமாக வசூல் செய்ததைப் பற்றியும், நாளது 1948—49-ம் வருஷத்தில் கால்நடைச்சந்தையில் மாடு 1-க்கு 4-அணுவுக்கு பதில் 5-அணு வீதமும் தோல் 1-க்கு 6-பைசாவுக்கு பதில் 3-அணு வீதமும் டிக்கெட் இல்லாமல் அதிக வரி வசூல் செய்து வருவதைப் பற்றியும், நாளது வருஷத்தில் சில்லரைச் சந்தை ஏலதாரராகிய, திரு T P. L ராஜா தலைச்சுமை 1-க்கு 3.பைசாவுக்கு பதில் 1-அணு வீதமும் வண்டி 1-க்கு 4-அணுவுக்கு பதில் 8-அணு வீதமும் ஏல நிபந்தனை 11-வது விதியில் கண்டவைகளுக்கு விரோதமாக வசூல் செய்து வருகிருர்கள் என்பதைப் பற்றியும், ஜில்லா போர்டு, ஸ்பெஷல் ஆபீஸர், ஜில்லா கலெக்டர், மணப்பாறைக்கு விஜயம் செய்த சென்னை அரசாங்க மந்திரிகள் அனைவரிடமும், பொது மக்கள் மகஜர் மூலமாகவும், நேரிலும் முறையிட்டுக் கொண்டும் நாளது வரை யாதொரு பயனும் இல்லையென்பதை மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்வதுடன் உடனடியாக தக்க நடவடிக்கை எடுத்து பகல் கொள்ளைபோல் ஏழை மக்களிடம் அதிக வரி வசூல்செய்யும் கொடுமையைத் தடுத்து விவசாயிகளுக்கும், சில்லரை வியாபாரிகளுக்கும் உதவிசெய்ய வேண்டுமென சென்னை அரசாங்க பிரதம மந்திரி கனம் O. P. ராமசாமி ரெட்டியார் அவர்களை கேட்டுக்கொள்கிறதென்று இந்த கூட்டம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

இதன் நகல் கீழ் கண்டவர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

சென்னை அரசாங்க மந்திரி.

1. கனம் சந்திரமௌளி, ஸ்தல ஸ்தாபன மந்திரி
2. ,, காளா வெங்கட்டராவ் ரெவின்யூ மந்திரி
3. ,, Dr. T. S. S ராஜன் உணவு மந்திரி
4. ,, T.S. அவனுசிலிங்கம் செட்டியார் கல்வி மந்திரி
5. ,, M பக்தவத்ஸலம் பொது மராமத்து இலாகா மந்திரி
6. ,, டேனியல் தாமஸ் மதுவிலக்கு மந்திரி
7. ஸ்ரீ. K. காமராஜ் நாடார் அவர்கள் தலைவர், த. கா. கமிட்டி.
8. ,, G. வரதராஜன் அவர்கள் தலைவர் ஜி.கா. கமிட்டி.
9. ,, P. R. தேவர், M. L. A.
10. ,, T. S. அருணாஜலம், M. L. A.
11. ,, B. வெங்கிடாஜலம் பிள்ளை, M. L. A.
12. ,, V. S. முகம்மது இப்ராகிம் ராவுத்தர் M. L. A.
13. ,, N. P. ராமையா, M. L. A.
14. ,, P. கக்கன், M. L. A.
15. ,, பொன்னுசாமி முதலியார், M. L. A.
16. ,, P. பொன்னம்பலக் கவுண்டர், M. L. A.
17. ஜில்லா கலெக்டர், திருச்சி
18. ஸ்பெஷல் ஆபீஸர், ஜில்லா போர்டு, திருச்சி
19. ஜில்லா போலீஸ் சூப்பரெண்டெண்டு, திருச்சி
20. லோகல் போர்டு இன்ஸ்பெக்டர், சென்னை
21. லோகல் போர்டு டிப்டி இன்ஸ்பெக்டர், திருச்சி
22. கண்ணன், நகர காங்கிரஸ் கமிட்டி, காரியதரிசி
23. ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர், கரூர்.

மணப்பாறை
26-5-48 } (Sd) M. சின்னச்சாமி ரெட்டியார்,
தலைவர்,
மணப்பாறை சந்தை வரி கொடுப்போர் சங்கம்.

# சரித்திர உண்மைகள்.

முஸ்லிம்களின் ஆட்சியை பயங்கரமென்றும் வெள்ளையர்களின் வருகையை விமோசன மென்றும் தீட்டிக்காட்டுவதற்கென்றே ஆங்கிலேயரால்கூலிக்கு அமர்த்தப்பட்ட ஆசாமிகள் இந்திய சரித்திரத்தை எழுதினர்கள். ஆயினும் முழுப்பூசனிக்காயையும் சோற்றில் மறைத்துவிட அவர்களால் முடியாமலேயே போய்விட்டது. இந்தியாவின் கோட்டைகளைப் போலவே வெள்ளையர்களால் தகர்க்கப்பட்ட இந்திய சரித்திரத்தின் இடிபாடுகளையே கடந்தகாலகம்பீரத்தை எடுத்துக்காட்டக்கூடிய பல சின்னங்கள் இன்னும் பிரகாசித்துக் கொண்டுதானிருக்கின்றன.

முஸ்லிம்களின் ஆட்சிகால இந்தியாவை வர்ணிக்கும் பல சரித்திர ஆசிரியர்களின் மேற்கோள்கள் கீழே தரப்படுகின்றன.

### டாக்டர் பர்னீர் பிரான்ஸின் பிரபல யாத்திரீகன்.

"உலகம் பூராவிலுமுள்ள தங்கம், வெள்ளியில் பெரும்பகுதியை பல வழிகளில் வாங்கிக்கொண்டு ஒருவழியில் மிக்க கஷ்டத்துடன் சிறிதளவு வெளியிடும் எல்லையற்ற ஒருசமுத்திரமாக இந்தியா விளங்குகிறது."

### அப்துல்லா வஸாப் என்ற சரித்திர ஆசிரியன்.

"ஆதம் (உலகத்தின் முதல் மனிதர்) காலத்திலிருந்து இன்றுவரை வெளிநாடுகளிலிருந்து தங்கம், வெள்ளி இதர விலையேறிய பண்டங்களைப் பெற்றுக்கொண்டு அதற்கு பதிலாக முட்கள், வேர்கள், மூலிகைகள், மண், கற்களை திருப்பிக் கொடுத்ததைத்தவிர பண்டங்களை கொடுத்த நாடுகளுக்கு பணத்தை விலையாகக் கொடுக்காத நாடு இந்தியாவைத்தவிர உலகத்திலேயே இல்லை.

### இப்னே பதூதா என்ற பிரபல யாத்திரீகன்.

"நாட்டிலிருந்து பணம் வெளியே கொண்டு செல்லப்படுவதை முஹம்மதுபின் துக்ளக் அனுமதிக்கவில்லை. அவர் காலத்தில் பணத்தை வெளியிலெடுத்துச் செல்ல முயற்சிப்பவர்கள் தண்டனைக்குள்ளாக வேண்டியிருந்தது."

### மேஜர் பாஸு.

"பிரஜைகளின் சுபிட்ச வாழ்க்கை பொருளாதாரம் சம்மந்தப்பட்டவரை முஸ்லிம்களின் ஆட்சிகாலம் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டும். ஷாஹேஜஹான் காலத்திலிருந்து வந்தசெல்வம், சுகம், நிம்மதிக்கு உதாரணமோ நிகரோ இல்லை.'

### லார்ட் மெக்காலே

"அநியாயக்காரர்களான முஸ்லிம்கள், கொள்ளைக்காரர்களான மராட்டியர்கள் காலத்திலும் வங்காளம் ஒரு சொர்க்கமாகவே காணப்பட்டு வந்தது. அதன் ஜனத்தொகையும் முக்கியத்துவம் வளர்ச்சியடைந்து கொண்டிருந்தது. தானியத்தின் அமோகத்தால் தூரத்திலிருந்த மாகாணங்களும் போஷிக்கப்பட்டு வந்தன. லண்டனிலும் பாரிஸிலுமுள்ள உயர் குடும்பங்களைச்சேர்ந்த பெண்மணிகள் வங்காள சர்க்காக்களின் உற்பத்தியான மெல்லிய ஆடைகளில் காட்சியளித்தனர்."

### W. M. டாரென்ஸ்.

"சிவாஜியை வகுப்புவாதி யென்றும், திப்புவை மதவெறியனென்றும் சொல்லப்படுகிறது. தென்னிந்திய சமஸ்தானங்களில் நாம் பிரவேசித்தபோது இங்கிலாந்து, ஐரோப்பாவின் எல்லாப் பகுதிகளிலும் மக்களை அழிப்பதற்குக் காரணமாயிருந்ததைப் போன்ற மதவெறி பெயருக்கும் அங்கிருந்ததில்லை. அயர்லாந்தில் ஒரு ரோமன் கத்தோலிக்கன் தன்னுடைய மூதாதையரின் சொத்துக்கு வாரிசாகவோ ராணுவ ஆபிசராக இருக்கத் தகுதியுள்ளவனாக கருதப்படாமலிருந்த காலத்தில் ஸ்வீடனில் லூதர் பக்தர்களைத்தவிர வேறு கொள்கையுள்ள எவனும் உத்தியோகம் வகிக்க முடியாமலிருந்த அதே சமயத்தில் இந்தியாவின் ஒவ்வொரு நகரத்திலும் ஒவ்வொரு தர்பாரிலும் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் கவுரவத்தையும் செல்வத்தையும் தேடுவதில் ஒருவரையொருவர் முந்திக்கொள்ள பூர்ண சுதந்திரம் பெற்றிருந்தனர்.

அத்துடன் கீழ்வரும் சரித்திர பூர்வமான சம்பவத்தைக் குறிப்பிடவேண்டியதவசியம்.

1768-ல் பஞ்சம் ஏற்பட்டபொழுது மேவுகளும், மராட்டியர்களும் பெருமளவில் ராஜபுதனத்தைவிட்டு வெளியேறி ரோஹில்கண்டுக்கு வரலாயினர். மன்னராயிருந்த ஹாபுஸுல்முல்க் ஆரம்பத்தில் அவர்களுக்கு உணவளித்து வந்தார். பிறகு பிலிபீத் என்னும்

ஊரைச்சுற்றி மதில் நிர்மாணிக்கும் வேலையில் ஈடு படுத்தினர். மதில் கட்டியான பிறகும் ராஜபுதனத்திலிருந்து வெளியேற்றம் நிற்கவில்லை. அதைப் பார்த்த ஹாபுஸுல் முல்க் கட்டி முடிந்த மதிலை இடித்துத் தள்ளிவிட்டு திரும்பவும் கட்ட உத்திரவிட்டான். ராஜபுதன மக்கள் ரோஹல்கண்டு மன்னரின் பிரஜைகளல்ல. அவருடைய மதத்தைச் சேர்ந்தவர்களுமல்ல என்பது குறிப்பிடத் தகுந்த விஷயமாகும்.

அத்துடன் விமோசனமளிக்கவந்த வெள்ளையர்களைப் பற்றியும் ஓரிரண்டு விஷயங்களை எழுதாமல் விடுவது நியாயமாகாது. அதிலும் வெள்ளையர்களே வெள்ளையர்களைப்பற்றி சொல்லியிருப்பதை இங்கு குறிப்பிடுவது மிகவும் பொருந்தும்.

கிழக்கிந்திய கம்பெனி சிப்பந்திகளைக் குறித்து கம்பெனி டைரெக்டர்களுக்கு எழுதிய கடிதத்தில் மதராஸின் பெரிய பாதிரி கீழ்வருமாறு எழுதுகிறார்.

'உங்களுடைய கம்பெனி சிப்பந்திகளின் ஒழுக்கங்கெட்ட நடத்தையால் இந்தியர்களின முன்னிலையில் உங்கள் தெய்வம் அகவுரவிக்கப்படுவதையும் உங்கள் மதத்துக்கு ஏற்படும் களங்கத்தையும் நீங்கள் பார்த்தால் உங்கள் கண்ணீர் ஆருய்ப் பெருக்கெடுத்து ஓடும். அங்கிருந்து வருபவர்களில் சிலர் கொலைகாரர்களாக இருக்கின்றனர். இன்னும் சிலர் ஜனங்களைக் கடத்திச் செல்லும் வேலையைச் செய்கின்றனர். மற்றும் சிலர் சம்சாரங்களை இங்கிலாந்தில் விட்டுவந்து இங்கு கல்யாணம் செய்துகொள்கின்றனர்."

முதன்முதலாக இந்தியாவுக்கு வந்த ஆங்கிலேயர்களின் வண்டவாளத்தை தெரிந்துகொள்ள கீழ்வரும் விஷயம் உதவியளிக்கக்கூடும். இந்தியாவில் வியாபாரம் செய்ய அனுமதிக்குமாறு 1600-ல் இங்கிலாந்து அரசாங்கத்திடம் செய்து கொண்ட விண்ணப்பம் பரிசீலனையில் இருக்கையில் சர் எட்வர்ட் மைக்கேலை கம்பெனியில் வேலைக்கு அமர்த்திக் கொள்ளும்படி இங்கிலாந்து அரசாங்கம் கம்பெனிக்கு எழுதிற்று. அதற்குப் பதிலாக கம்பெனி கீழ்வரும் விசித்திரமான தீர்மானத்தைநிறைவேற்றி அரசாங்கத்துக்கு அனுப்பி வைத்தது.

"பொறுப்பு வாய்ந்த எந்த வேலையிலும் ஒழுக்கமுள்ளவர்கள் நியமிக்கக்கூடாதென்றும் நம்முடைய காரியங்களில் நம் போன்றவர்களையே தேர்ந்தெடுக்க அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறோம். நேர்மையானவர்களை வேலைக்கு அமர்த்துவதன்மூலம் கம்பெனி டைரெக்டர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டு தங்களுடைய மூலதனத்தை வாபஸ் பெற்றுவிடுவார்களோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது."

## பண்ருட்டி.

26—6—48 காலை 11-மணிக்கு சொ. சபாபதி செட்டியார் சத்திரத்தில், நகர சோஷலிஸ்ட் கட்சி சார்பில் யூனிட் அமைத்தல். கூட்டம் நடைபெற்றது அது சமயம் ஜில்லா சோஷலிஸ்ட் கன்வீனர், A. S. ராமகிருஷ்ணன். உதவி கன்வீனர். R. சௌரிராஜன் (ஜனதா) ஆர்கனைசர், A. வெங்கிடாஜலம் ஆகியவர்கள் கட்சி சம்மந்தமாக ஒவ்வொரு பார்ட்டியும், செய்யவேண்டிய வேலைகளும், பிரதி நாள்தோறும் குறைந்த பக்ஷம் மூன்றுமணி நேரமாவது கட்சி சம்மந்தமாக ஒவ்வொரு நிர்வாகத்திலும் பிரசாரம் செய்துத் தங்கள் டைரி புத்தகத்தில் பதிவுசெய்துகொள்ள வேண்டும் என்றும் வெகு விரிவாக பார்ட்டிகளுக்கு சொல்லி உடன் யூனிட் அமைத்தார்கள். அதற்கு சோஷலிஸ்ட் பார்ட்டி (இந்தியா) பண்ருட்டியூனிட் என்று பெயரிட்டு கீழ்க்கண்ட நபர்களை யூனிடிக்கு அங்கம் நியமனம் செய்தார்கள்

1 R. தங்கராஜி —கன்வீனர் நிதி அரங்கம்.
2 R. பெத்தையன் —தொழிலாளர் அரங்கம்.
3 A. L. ஜப்பார் —மாணவர் அரங்கம்.
4 N. ஷண்முகம் —பொதுஜன அரங்கம்.
5 R. N. சின்னையன்—விவசாயம் அரங்கம்.

## பொதுக் கூட்டம்.

26—6—48 மாலை 7-மணிக்கு சோஷலிஸ்ட் பார்ட்டி(இந்தியா)பண்ருட்டி டவுன் யூனிட் சார்பில் நேதாஜி சவுக்கில், M. ஷண்முகம் தலைமையின்கீழ் கூட்டம் நடைபெற்றது. அது சமயம் R. அண்ணாமலை தேசிய கீதம் பாடியபின் (ஜனதா) ஆர்கனைசர், A வெங்கிடாஜலம் சோஷலிஸ்ட் கன்வீனர், A. S ராமகிருஷ்ணன். உதவி கன்வீனர், R. சௌரிராஜன் ஆகியவர்கள் பத்திரிகை வளர்ச்சி சம்மந்தமாகவும், தொழிலாளர் முன்னேற்றத்திற்கு பாடு படவும், சோஷலிஸ்ட் கட்சிக்கும் மற்றும் இதர கட்சிக்கும் உள்ள வித்தியாசங்களையும், வேலைகளையும், திட்டங்களையும், விரிவாகவும், அழகாகவும் நீண்டநேரம் சொற்பொழிவு ஆற்றினர்கள். R. பெத்தையன் அவர்கள் சுருட்டுத் தொழிலாளர் சம்மந்தமாக சில குறைகளைச் சொல்லி கூலிகளையும் சொல்லி மற்ற ஊர்களில் கூலி அதிகமாகவும், குறிப்பாக இவ்வூரில் K. சம்மங்கி ராமசாமி நாயுடு, து. பங்காரு நாயுடு, S. P ராமச்சந்திர செட்டியார் ஆகிய இவர்களிடத்தில் சுமார் 100-பேர் வேலை செய்கிறார்கள். இது சம்மந்தமாக R. பெத்தையன் அவர்கள் அடுத்த கூட்டத்திற்கு கூலி விபரத்துடன் எடுத்துச் சொல்லுகிறேன் என்று சொல்லிமுடித்தார். தலைவர் முடிவுரை சொல்லி கூட்டம் பத்துமணிக்கு முடிந்தது.

# காங்கிரஸின் தேசீய பாஷை.

## பண்டித பந்துக்கு ஹிப்ஸுர் ரஹ்மான் பதில்.

ஜமீயத்துல் உலமாவின் பொதுக் காரியதரிசியான மௌலானா ஹிப்சுர் ரஹ்மான் பத்திரிகைகளுக்குக் கீழ்வரும் அறிக்கை விடுத்துள்ளார்.

"காங்கிரஸ் ஹிந்தியை ஆதரிக்கிறது. சோஷலிஸ்டுகள் விரும்பும் நாகரி, உர்து லிபிகளில் எழுதப்படும் ஹிந்துஸ்தானியால் நம்முடைய புராதன கலாசாரத்தை பாதுகாக்க முடியுமா?" என்று ஐ. மா. பிரதமர் பண்டித பந்த் பேசியதாக பத்திரிகைகளில் வெளியான செய்தி என் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

காங்கிரஸின் முடிவான கொள்கைக்கும் ஜனநாயக ஜீவனுக்கும் எதிராக மஹாத்மாஜியின் சிஷ்யரும் காந்திஜியின் கொள்கைகளை பரிபூரணமாய் உணர்ந்திருப்பவரும், சிறந்த அறிவாளியுமான பண்டித பந்த் அவ்விதம் பேசியிருக்க முடியுமென்று என்னால் நம்பமுடியவில்லை. சொந்த நலன்களை பெரிய மனிதர்கள் மீது சுமத்தி செய்யப்படும் பிரசாரமாகவே இதுவும் இருக்கலாம்.

ஆயினும் பண்டித கோவிந்த வல்லப பந்துடன் சம்பந்தப்படுத்தி பத்திரிகைகளில் வெளியான மேற்கூறிய அபிப்பிராயம் முற்றிலும் சரியல்லவென்று நான் நிச்சயமாகச் சொல்லுவேன். காங்கிரஸ் ஏற்றுக் கொண்டிருக்கும் யோஜனைப்படி உர்து, நாகரி லிபிகளின் எழுதப்படும் ஹிந்துஸ்தானியே தேசீய பாஷையாக இருக்கமுடியும். ஹிந்துஸ்தானியே தேசத்துக்கு நன்மைபயக்க முடியுமென்று மஹாத்மாஜி கடைசிவரை ஆதரித்தார். ஒவ்வொரு இந்தியனும் உர்து, நாகரி லிபிகளைக்கற்று ஐக்கியத்தை நிரூபிக்க வேண்டுமென வற்புறுத்தி வந்தார்.

அப்படி யிருந்தும் ஹிந்துஸ்தானியால் இந்திய கலாசாரம் பாதுகாக்கப்பட முடியாதென்று யாராவது நினைப்பது அவர்களுடைய அறியாமையையே காட்டுகிறது. இந்திய கலாச்சாரத்துக்கும் தேசீய கவுரவத்துக்கும் மஹாத்மாஜியைவிட பெரிய பாதுகாப்பாளன் யாருமிருக்கமுடியாது. இந்தியாவின் எவ்வளவு பெரிய மனிதரா யிருப்பினும் மஹாத்மாஜியின் லட்சியத்துக்கும், காங்கிரஸின் கொள்கைக்கும் எதிராக நடக்கும்போது அவருடைல் தவறான போக்கை எவனும் ஆதாரமாகக் கொள்ளமுடியா தென்பதே என்னுடைய முடிவு அம்மாதிரியானவர்களுக்காக காங்கிரஸையும் காந்திஜியையும் மறந்துவிட முடியாது. காங்கிரஸின் முடிவுகளை வாழ்க்கை விதிகளாகக்கொண்டு மஹாத்மாஜியின் கொள்கையைக் கடைப்பிடித்து நடப்பதிலேயே இந்தியாவின் விமோசனம் அடங்கியிருக்கிறது.

---

நாகை, 29—6—48

### தஞ்சை ஜில்லா
### காங்கிரஸ்காரர்களுக்கும் காங்கிரஸ் அபிமானிகளுக்கும்
ஜில்லா காங்கிரஸ் கமிட்டி தலைவரான
### A. M. சாமிநாத செட்டியார் விடுத்த
## அறிக்கை.

என்னை ஜில்லா கமிட்டிக்கு தலைவராகத் தேர்ந்தெடுக்க உதவி புரிந்த எனது சக அங்கத்தினர்களுக்கும், காங்கிரஸ்காரர்களுக்கும் எனது தாழ்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை ஜில்லா நிர்வாகத்தை நடத்த தங்கள் எல்லாருடைய பூரண ஆதரவும், ஒத்துழைப்பும் கிடைக்கும் என்று நம்புகிறேன். மஹாத்மா காந்தி அடிகளின் நிர்மாணத் திட்டத்தை வெற்றிகரமாக ஜில்லா பூராவும் நிறைவேற்றி அமுலுக்குக் கொண்டு வர தங்களின் உதவி அத்யாவசியமானது.

நமது ஜில்லா விவசாயத் துறையிலும், கைத்தொழில் வளர்ச்சியிலும், கல்வி அபிவிருத்தியிலும், முன்னேற்றமடையவேண்டிய முயற்சிகளை உடனடியாக எடுத்துக்கொள்ளவேண்டும். மதுவிலக்கு சட்டம் வெற்றிபெற வேண்டுமானால் ஜில்லாவாசிகளின் விழிப்பினால்தான் முடியும். விளைபொருள்கள் குறைவு, அதிக விலை, கள்ள மார்க்கெட் இவைகளின் காரணமாக ஏழைகள் படும் கஷ்டம் உடனடியாக நீங்க ஏற்பாடு செய்யவேண்டும். நமது ஜில்லாவிலே சில இடங்களில் உணவுக் கஷ்டத்தால் ஜனங்கள் பட்டினி கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதென்றால் நாம் வருந்தவேண்டித்தான் இருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டமோ சொல்ல முடியாது. இவ்வளவோடில்லாமல் உணவு உற்பத்தியாளராகிய விவசாயிகளிடமும், தொழிலாளிகளிடமும் துர்பிரசாரம் செய்து நாட்டில் குழப்பத்தை உண்டாக்கி விடுகின்றனர் ஒரு சிலர்.

# தேசீயத் தாலாட்டு.

—[ ஷேக் பீர், கல்லிடைக்குறிச்சி]—

1 ஆராரோ ஆராரோ
ஆரிவரோ ஆராரோ
ஆராரோ ஆராரோ
ஆரிவரோ ஆராரோ.

2 கன்னல் நற் கனிரசமோ!
கற்கண்டோ! இன்பாலோ!
மன்னர் மா மகுடமிளிர்
மரகதமோ! மாண்மணியோ!

3 தேசத்தொண் டாற்றுவதே
தெய்வத்தொண் டாகுமென்று
பாசமுட னே கொண்டு
பார்மீது வந்தவனே!

4 மக்கள்ப ணிமறையோன்
மிக்கபணி யென்றுேழுக
தக்கநெறி தானறிந்து
தரணியின்கண் வந்தவனே!

5 காங்கிரஸ்ம காசபையில்
கட்டுப்பா டாக நின்று
ஓங்கி வள ரச் செய்ய
உறுதுணையாய் வந்தவனே!

6 காந்தி மகான் காட்டிய நல்
கடைத்தேறும் மார்க்கமதை!
கைக்கொண்டு பூதலத்தே
கற்பிக்க வந்தவனே!

7 முஸ்லிம் லீக் வித்திட்டு
முளைத்திட்ட வேற்றுமையை
மூட்டோட ழித்தொழிக்க
முன்னிற்க வந்தவனே!

8 இந்நாட்டில் முன்னுளில்
இந்து முஸ்லிம் ஒன்ருக
இன்பமுடன் வாழ்ந்ததெல்லாம்
இங்குணர்த்த வந்தவனே!

9 இந்தியர்க ளெல்லோரும்
இணை பிரியா சோதரராய்
இந்நாடு ஓங்கி நிற்க
இங்குழைக்க வந்தவனே!

10 ஒன்றுபட்டால் வாழ்வென்று
உரைத்திட்ட பாரதிசொல்
நன்ருக நானிலத்து
நாட்டிடவே வந்தவனே!

11 தெள்ளமுதே! செந்தேனே!
தெவிட்டாத தீங்கனியே!
உள்ளங்க வரவந்த
உத்தமனே கண்ணுறங்கு

12 கண் தூங்கு கண் தூங்கு
கண்மணியே கண் தூங்கு
கண் தூங்கு கண் தூங்கு
கண்மணியே கண் தூங்கு

(முன் பக்கத் தொடர்ச்சி.)

ஜில்லாவிலுள்ள காங்கிரஸ் ஊழியர்கள் இலைகளை எல்லாம் கவனித்து மக்களுக்கு வேண்டிய உதவி புரிய வேண்டியது. வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், உணவு உற்பத்தி பெருக்கம் ஆகியவைகளில் அவர்கள் ஊக்கத்துடன் வேலை செய்து வருவதோடு ஜில்லா கமிட்டியுடன் ஒத்துழைத்தால் ஜனங்களுக்கு ஏற்படும் சகலவித குறைபாடுகளையும் நிவர்த்திக்கத் தக்க நடவடிக்கைகள் எடுக்க ஏற்பாடு செய்யலாம்.

நேருஜீயை பிரதமாராகவும், அறிவுக்களஞ்சியம் ஸ்ரீ C. ராஜகோபலாச்சாரியாரை கவர்னர் ஜெனராலாகவும் கொண்ட இந்திய யூனியனுக்கு ஜில்லாவாசிகள் பூரண ஆதரவு காட்ட வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன். குழப்பத்தை உண்டாக்கி யூனியன் நிர்வாகத்திற்கு இடையூறு செய்துவரும் கும்பல்களின் செய்கைக்கு இடம் கொடுக்காதீர்கள். அஹிம்சா மூர்த்தி மஹாத்மாஜீயின் சத்திய நெறியைக் கடைப்பிடித்து அவர் காட்டிய வழியைப் பின்பற்றி நடக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

# பண்டித நேரு நல்லவர்தான்......

## —: காங்கிரஸால் முதலாளித்துவத்தை ஒழிக்க முடியாது. :—

அலிகார்,. 21—6—48

"சுதந்திரம் பெற்றதுடன் காங்கிரஸின் வேலை முடிந்துவிட்டது. சர்க்காரில் சேர்ந்து நிர்வாகப் பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு காங்கிரஸ் ஒரு அரசியல் கட்சியாக மாறியிருக்கிறது. இன்று காங்கிரஸ் தேசீய ஸ்தாபனமல்ல. எனவே அதற்கு தேசம் பூராவின் பிரதிநிதித்வம் இருப்பதாகச்சொல்ல முடியாது." லாயல் லைப்ரரியில் பேசும்போது சோஷலிஸ்டு தலைவர் ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் மேற்கண்ட விதம் கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது "காங்கிரஸில் இருந்து வெளியேறியதற்கு காங்கிரஸுடன் சண்டைபோடுவதைத் தவிர சோஷலிஸ்டுகளுக்கு வேறு வேலையிருக் கவில்லையென்பது அர்த்தமல்ல. தேசத்தில் ஒரு சோஷலிஸ்டு ஜனநாயக குடியரசை நிர்மாணிக்கவே நாம் விரும்புகிறோம்."

### நேரு கொள்கை.

"காங்கிரஸில் நல்லவர்களும் இருக்கின்றனர். குறிப்பாக பண்டிதநேரு. எனக்கு அவரிடம் பரிபூரண நல்லெண்ணமும் அபார அன்பும் உண்டு. ஆயினும் அவரால்ஒன்றும் செய்ய முடியாதென்று நினைக்கிறேன். அவரை விட பலமுள்ளவர்கள் இருப்பதே அதற்குக் காரணம்"

அவர் பண்டித நேருவை பீஷ்மருக்கு ஒப்பிட்டார்.

"அதிகாரத்தைக் கைப்பற்ற உள்ளுக்குள்ளேயே முயற்சி செய்பவர்களும் காங்கிரஸில் இருந்துவருகின்றனர். ஆகையால் எதிர் கட்சி அவசியமாயிற்று. சோஷலிஸ்டுகள் மாத்திரமே சக்தியுள்ள சரியான எதிர்கட்சியாக இருக்கமுடியும்."

"தொண்ணூற்றொன்பது சத விகித மக்களை நிர்க்கதியாய் வறுமையில் உழன்று கொண்டிருக்க விட்டுவிட்டு நாட்டின் செல்வம் ஒரு சில ஆசாமிகளின் கைக்குப்போய் சேருவதை எந்த ஒரு சட்டத்தைக்கொண்டும் அனுமதிக்கலாகாது. சமத்துவ பொருளாதாரப் பங்கீட்டு முறை ஒன்றால் மட்டுமே நாட்டின் பிரச்னை தீர முடியும். இன்றைய அரசியல் திட்டத்தில் பெருவாரியான மக்களை ஒரு சிலர் சுரண்டிக்கொண்டிருக்க இடமிருக்கிறது."

### சோஷலிஸ்டு திட்டம்.

உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற சர்க்கார் கொள்கையைக் குறித்து ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் அடியில் வருமாறு அபிப்பிராயம் தெரிவித்தார்.

"நோக்கம் புனிதமானதுதான். ஆயினும் இன்றைய சமூக அமைப்பில் அதனால் பொதுமக்கள்வாழ்க்கையில் நன்மையோ முன்னேற்றமோ ஏற்பட முடியாது. அதற்கு மாறாக பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாவர். ஏழைகள் இன்னும் ஏழைகளாகி விடுவர்."

சோஷலிஸ்டுகள் திட்டத்திலும் உற்பத்திப் பெருக்காலேயே நாட்டின் செல்வம் பெருகுமாயினும் பொது மக்களுக்கு நன்மை தரும் விதத்தில் அது இருக்கும். உற்பத்தியைப் பெருக்குபவர்களுக்கே செல்வம் பகிர்ந்து கொடுக்கப்படும். அதனால் ஏழையின் வருமானம் உயரும். அதன்பிறகு நாட்டின் இரண்டு வர்க்கத்தினரிடையே இன்று காணப்படும் ஏற்றத்தாழ்வு அகன்றுவிட முடியும்.

டாக்டர் சியாம பிரசாத் முகர்ஜியும், பண்டித நேருவும் வெளியிட்ட இந்திய சர்க்காரின் தொழில் கொள்கையை ஸ்ரீ ஜயப்பிரகாஷ் குறை கூறினார்.

"அதன் மூலம் முதலாளித்துவம் ஒழியாது. பத்து வருஷங்களுக்குப் பிறகும் தொழில்களை தேசீயமயமாக்க முடியாது. பிரைவேட் தொழில்கள் விஸ்தரிக்க இந்தஇடைக்காலம் நல்லசந்தர்ப்பமாகும். இன்னும் பத்து வருஷங்கள்வரை காங்கிரஸில் அதிகாரத்திலிருப்பினும் பிரைவேட் தொழில்களை தேசீயமயமாக்கி முதலாளித்துவத்தை ஒழிக்க அதனால் முடியாது."

"காங்கிரஸ் சர்க்கார்களால் முதலாளிகளுக்கு எவ்வித நஷ்டமும் ஏற்படாதென்று, சாதாரண மனிதரல்ல ஸர்தார் படேலைப் போன்ற பொறுப்பு வாய்ந்தவரும் உறுதியளித்திருக்கிறார்."

### முதலாளி வர்க்கத்துக்கு சலுகை.

காங்கிரஸின் முன்னணித்தலைவர்கள் தாங்கள் முதலாளித்துவத்தை எதிர்ப்பதாகவும் சமத்துவபொருளாதார பங்கீட்டை ஆதரிப்பதாகவும், மக்களுக்கு

# காங்கிரஸ் எதிரிகளின் கதியே சோஷலிஸ்டுகளுக்கும்

—( பண்டித கோவிந்த வல்லப பந்து )—

சோஷலிஸ்ட் தலைவர் ஆசார்ய நரேந்திர தேவுடன போட்டிபோடும் பாபா பகவான் தாஸை ஆதரித்து நடந்த பைஸாபாத்கூட்டத்தில்காங்கிரஸை உறுதியுடன் ஆதரிக்கும்படியும் நெருக்கடியான இக்கட்டத்தில் அரசாங்கக் கப்பலை கரைசேர்க்க முயற்சிக்கும் பண்டித நேரு, சர்தார் பட்டேல் இருவரின் கைகளையும் பலப்படுத்தும் படியும் ஐ மா. பிரதமர் பண்டித கோவிந்த வல்லப பந்த் ஜனங்களைக் கேட்டுக் கொண்டார்.

மேலும் அவர் கூறினர் பண்டித நேருவும், சர்தார் பட்டேலும் கிடைத்த சுதந்திரத்தை பலப்படுத்த தீவிரமாய் முயற்சித்து வருகின்றனர். காங்கிரஸுக்கு எதிராக அளிக்கப்படும் ஒவ்வொரு ஓட்டும் அவர்களை பலஹீனப்படுத்தும். சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்த தலைவர்களையே இந்தியர்கள் நம்பவில்லையென்று உலகத்தோர் நினைக்க சந்தர்ப்பம் கிடைத்துவிடும். அதனல் சர்வதேசப் பிரச்னைகளில் இந்தியாவின் நிலைமை பாதிக்கப்பட நேரிடும்.

தேர்தலில் காங்கிரஸ் தோற்பதால் நிஜாம் பலமடையலாம். ஹைதராபாத்தில் மக்கள் ஆட்சி யேற்பட வேண்டுமென்ற பண்டித நேருவின் கோரிக்கையை இந்தியமக்களே ஆதரிக்கவில்லை யென்று நிஜாம் சொல்லக்கூடும். காஷ்மீரில் படையெடுப்பாளர்கள் ஊக்கமடைந்து இந்திய சர்க்காரில் மாறுதல் ஏற்படும் என்ற நம்பிக்கையில் யுத்தத்தை நீடிப்பார்கள். காஷ்மீர் கமிஷன் விஜயம் செய்ய விரும்புகிறது காங்கிரஸுக்கு எதிரான ஒவ்வொரு ஓட்டும் இந்திய சர்க்காரின் அந்தஸ்தைக் குறைக்கும்

## அமைதியா? அல்லது அழிவா?

சுதந்திரத்தை வாங்கியதுடன் அமைதியை நிலைநாட்டுவதிலும காங்கிரஸ் வெற்றியடைந்திருக்கிறது. காங்கிரஸ் தோற்றால் இன்றைய அரசாங்கத்துக்குப் பதில் அழிவும் வெளியேற்றமுமே கிடைக்கும் தேசத்தில் ஆண், பெண்களின் வாழ்க்கைகளுக்கு பாதுகாப்பிருக்காது. நீங்கள் விரும்புவது அமைதியும், சுதந்திரமுமா? அல்லது அழிவும், வெளியேற்றமுமா? என்பதை உங்கள் ஓட்டுமூலம் முடிவுசெய்யப்படவேண்டும்.

ஆசார்ய நரேந்திர தேவ் என்னுடைய நெருங்கிய நண்பர். பல்வருஷங்களாக என்னுடைய சகா. இருந்தும் அவருக்கு ஓட்டு கொடுக்கும்படி என்னால் சொல்லமுடியவில்லை. அவருக்கு ஓட்டுக்கொடுப்பது காங்கிரஸை எதிர்ப்பதாகும். நம்முன்னுள்ள பிரச்னை ஆசார்ய நரேந்திர தேவும் பாபா பகவான் தாஸுமல்ல. காங்கிரஸ் அல்லது சோஷலிஸ்ட் தலைவர்கள் மீது நம்பிக்கை என்பதே பிரச்னை. தேர்தல்களில் தனி நபர்களுக்கு முக்கியத்துவம் கிடையாது. கடந்த காலத்தில் மிஸ்டர் சுரேந்திரநாத் பானர்ஜி சீ வை. சிந்தாமனியைப் போன்றவர்களும் காங்கிரஸை எதிர்த்து நிற்க முடியவில்லை சட்டசபைகளில் பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து அனுப்புவதற்கு கல்வியும், உறுதிகூறி வந்திருக்கின்றனர் இருப்பினும் அதிகாரத்தில் அமர்ந்து கொள்கை வகுக்க முற்பட்டபோது முதலாளித்துவத்தை விட்டு வைப்பதற்கு சாக்கு போக்குகளைச் சொல்ல ஆரம்பித்துவிட்டனர் இங்கிலாந்தின் தொழிற்கட்சி சர்க்கார் பாங்குகளை தேசியமயமாக்குவதில் வெற்றி படைந்திருக்கிறது அத்துடன் ரயில்வேக்கள், இரும்புத் தொழிற் சாலைகள், சுகாதார சர்வீஸ்களையும் தேசியமாக்கிவிட்டது. ஆனல் இந்திய சர்க்கார் இதுவரை ஒன்றுமே செய்யவில்லை. செய்யும் உத்தேசம் இருப்பதாகவும் தெரியவில்லை. கப்பல் கட்டும் தொழிலில் சர்க்கார் ஐம்பத்தொன்று சதவிகிதத்தை வைத்துக்கொண்டு நாற்பத்தொன்பது சதவிகிதம் முதலாளிகளுக்குக் கொடுத்திருப்பதுடன் ஒரு ஏஜென்ஸியையும் கொடுத்திருக்கிறது. டாடாவுக்கு ஆகாய விமானங்களை உற்பத்தி செய்ய அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. பிர்லாவுக்கும், டால்மியாவுக்கும் காட்டிலாகா தொழில்களும் இதர தொழில்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.''

ஜாதி, மத, அடிப்படையில் அரசியல் கட்சிகள் ஸ்தாபிப்பதையும் மாகாண உணர்ச்சியையும் வகுப்பு வாதத்தையும் வன்மையாகக் கண்டித்தார். காஷ்மீர் பாகிஸ்தானுடன் இணைவதை பாகிஸ்தான் சோஷலிஸ்டு கட்சி ஆதரித்ததைக் குறிப்பிடுகையில் இந்திய சோஷலிஸ்டு கட்சிக்கும் பாகிஸ்தான் சோஷலிஸ்டு கட்சிக்குமிடையே எவ்வித சம்மந்தமுமில்லையென்று ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயண் கூறினர்.

திறமையும் உரைகல் அல்ல. மக்கள் நலனுக்கு பிரயோஜனப் படாதவரை கல்வியால் பயனில்லை.

## காந்திஜியுடன் துரோகம்.

மக்கள் மகாத்மா காந்திக்கு நன்றி செலுத்த வேண்டும். அவர் இந்த நாட்டை தட்டியெழுப்பினர். புது வாழ்க்கையின் ஜீவனை மக்களுக்குள் புகுத்தினர். நேருவும் பட்டேலும் அவருடைய வாரிசுகள். காங்கிரஸை எதிர்த்து ஒட்டளிப்பது மகாத்மாவுடன் துரோகம் செய்வதாகும். பாபா பகவான்தாஸ் காந்திஜியின் சிஷ்யர். ஆகையால் மக்கள் அவருக்கு ஒட்டுக்கொடுக்க வேண்டும். சிதறுவதற்கு பதிலாக ஒன்றுபடும்படி காலப்போக்கு நம்மை வற்புறுத்துகிறது. பரஸ்பர சச்சரவுகளே நம்கடந்தகால அடிமைக்குக் காரணம். சரித்திர போதனைகளை அலட்சியம் செய்துவிட்டு சுதந்திரம் கிடைத்தும் சோஷலிஸ்ட்டுகள் காங்கிரஸிலிருந்து விலகியது வருந்தத்தக்கதாகும்.

## காங்கிரஸும் சோஷலிஸமும்.

சோஷலிஸத்தின் அடிப்படை கொள்கைகளை காங்கிரஸ் ஏற்றுக்கொண்டிருக்கிறது. காங்கிரஸின் பொருளாதார திட்டத்தை ஜெயப்பிரகாஷ் நாராயண்னும் ஏற்றுக்கொண்டிருக்கிறார். அத்திட்டத்தை அமுல் நடத்த ஆரம்பித்தபோது சோஷலிஸ்டுகள் காங்கிரஸையே எதிர்க்க ஆரம்பித்து விட்டனர். காங்கிரஸிலிருந்தபோது சோஷலிஸ்டுகள் ஏற்றுக் கொண்டிருந்த எல்லா விஷயங்களும் இன்று திரித்துக்கூறி குறை கூறப்படுகின்றது ஏனெனில் சோஷலிஸ்டுகள் இன்று காங்கிரஸுக்குள் இல்லை. அரசியல் நிர்ணய சபை மக்களின் அடிப்படை உரிமைகளையும் சமத்துவ ஜனநாயக கொள்கைகளையும் ஏற்றுக்கொண்டிருக்கிறது

சோஷலிஸ்டுகள் எதிர்கட்சியின் அவசியத்தைப் பற்றி பேசிவருகின்றனர். தீவிரசோஷலிஸம் ஒரு சோஷலிஸ்டு ஸ்டேட்டில் எதிர்ப்பு சக்தியை அனுமதிப்பதில்லை. சோஷலிஸ்டுகள் சோவியத் யூனியனிலிருக்கும் சோஷலிஸத்தை ஆதரிக்கவில்லையென்றால் காங்கிரஸை எதிர்ப்பது சரியல்ல. ஏனெனில் காங்கிரஸ் ஜனநாயக சோஷலிஸத்தை ஒப்புக்கொண்டிருக்கிறது

## சோஷலிஸ்டுகளும் முன்ஷி அஹ்மத்தீனும் !

சோஷலிஸ்டுகள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட பேச்சுக்களை பேசுகின்றனர். பாகிஸ்தானில் சோஷலிஸ்ட் கட்சியை ஸ்தாபித்த முன்ஷி அஹ்மத்தீனைப் போன்றவர்களும் சோஷலிஸ்டுகளாக இருக்கின்றனர் முன்ஷி அஹ்மத்தீன் தலைமைவகித்து பாகிஸ்தானில் நடந்த சோஷலிஸ்ட் கூட்டத்தில் காஷ்மீர் பாகிஸ்தானுடன் இணைக்கப்பட வேண்டுமென்றும் படையெடுப்பாளருக்கு பாகிஸ்தான் உதவிசெய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. முன்ஷி அஹ்மத்தீன் பாகிஸ்தான் சோஷலிஸ்டு கட்சியின் பொதுக் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இம்மாதிரிக்கொள்கையுள்ளவர்களை இந்தியப் பொதுமக்கள் ஆதரிப்பதாயிருந்தால் காஷ்மீரில் மேலும் ரத்தம் சிந்தாமல் இந்தியத் துருப்புக்களை வாபஸ் பெறுவதே நல்லது.

ஜமீன்தார்கள், முஸ்லிம்கள் முதலியோரின் குறிப்பிட்ட நலன்கள் காங்கிரஸை பலஹீனப்படுத்தி வருகின்றன கடந்த ஜில்லாபோர்டு தேர்தலில் அதே பிற்போக்கு வாதிகள் சோஷலிஸ்ட் கட்சி சார்பில் அபேக்ஷகர்களாய் நியமிக்கப் பட்டிருந்தனர். அவர்கள் காங்கிரஸ் எதிர்ப்பு சக்திகளுடன் இணைந்துவிடுகின்றனர்.

நாகரி, உர்து லிபிகளில் எழுதப்படும் ஹிந்துஸ்தானியை சோஷலிஸ்டுகள் தேசிய பாஷையாக்க சோஷலிஸ்டுகள் விருப்புகின்றனர். காங்கிரஸ் ஹிந்தியை ஆதரிப்பதாக அறிவித்துவிட்டதுடன் சர்க்கார் இலாக்காக்களில் ஹிந்தியைக்கொண்டு வந்தும்விட்டது. புராதன நாகரீகத்தை பாதுகாக்க இரண்டில் எதை ஆதரிப்பதென்று ஜனங்கள் தீர்மானிக்க வேண்டியது முக்கியப் பிரச்னையாகும்.

## காங்கிரஸின் சாதனைகள்.

ஆகஸ்ட் 15-க்குப் பிறகு நாட்டில் நடந்த திடுக்கிடத்தக்க சம்பவங்களை சமாளித்து காங்கிரஸ் சர்க்கார் இந்தியாவை பலம்வாய்ந்த ஜனநாயக நாடாக உருவாக்குவதில் வெற்றியடைந்திருக்கின்றது. கிட்டத்தட்ட அறுநூறு சமஸ்தானங்கள் இந்தியாவில் இணைக்கப்பட்டன. அந்தப்பெருமை ஸர்தார் பட்டேலுக்கே உரித்தாகும். வீடுகளை இழந்து பாகிஸ்தானிலிருந்து ஓடிவந்த லட்சக்கணக்கான அகதிகளை குடியேற்றியாயிற்று. பள்ளிக்கூடங்கள், காலேஜ்கள், ரோடுகள், கால்வாய்கள், ஆஸ்பத்திரிகளை மாகாண சர்க்கார்கள் ஏற்படுத்தியிருக்கின்றன.

## ஆசையும் எச்சரிக்கையும்

சோஷலிஸ்டுகள் காங்கிரஸுடன் ஒத்துழைத்து சர்க்காரை பலப்படுத்தி இன்றைய சிக்கலான பிரச்னைகளை சமாளிப்பதில் உதவிசெய்யுமாறு அழைக்கிறேன். சோஷலிஸ்டுகள் இந்த யோஜனையை ஏற்காவிட்டால் இதற்குமுன் காங்கிரஸை எதிர்த்தவர்கள் அடைந்தகதியே அவர்களும் அடையப்போவது நிச்சயம்.

# க்ளைவ் முதல் லார்ட் மவுண்ட்பேட்டன் வரை.

—[ K. M. ஷரீப், கும்பகோணம். ]—

ஆங்கிலேயர்களின் கடைசி ஆங்கிலப் பிரதிநிதியான லார்ட் மவுண்ட்பேட்டன் போனதுடன் ஆறு வருஷங்களுக்கு முன் ஆரம்பமான 'வெள்ளையனே வெளியேறு' போராட்டம் ஒருவாறு வெற்றியடைந்து விட்டது. இந்தியர்களின் உணர்ச்சியை ஒடுக்குவதற்காக ஆங்கில ஆட்சியின் அடக்குமுறை சக்திகள் அனைத்தும் அன்று உபயோகிக்கப்பட்டன. அதனால் கொல்லப்பட்ட நிரபராதிகள் பல்லாயிரம்; விதவைகளான பெண்மணிகள் அனந்தம்; தூக்கு மேடையில் தொங்கிய இந்திய வாலிபர்கள் ஏராளம்; எத்தனையோ வீடுகள் தகர்ந்து தரைமட்டமாயின.

இந்தியர்களின் உணர்ச்சிப்பெருக்கை தடுத்து நிறுத்த அடக்கு முறைகளாலும், அக்ரமங்களாலும் முடியவில்லை சுதந்திரக் கிளர்ச்சி மேலும் ஓங்கிற்று. பொறிகள் ஜ்வாலைகளாக மாறின முடிவில் சாம்ராஜ்ய கட்டிடம் பொசுங்கி சாம்பலாய்விட்டது.

முதன்முதலாக வியாபாரிகள் வேஷத்தில் வந்த ஆங்கிலேயர்கள் இங்கிருந்த நிலைமையை பிரயோஜனப் படுத்திக்கொண்டு காலை ஊன்றிக்கொண்டுவிட்டனர். கபடம், பித்தலாட்டம், மோசடி, கொள்ளை, சுரண்டலுக்கு இந்தியாவிலிருந்த ஆங்கில ஆட்சி ஒரு எடுத்துக் காட்டாக விளங்கிற்று.

கிழக்கிந்திய கம்பெனி ஒரு கொள்ளைக்கூட்டம். இந்தியாவை சுரண்டுவது மட்டுமின்றி கம்பெனி சிப்பந்திகள் தனிப்பட்ட முறையிலும் வியாபாரத்தை நடத்தி தங்கள் கம்பெனியையும், நாட்டையும்கூட மோசடி செய்து வந்தனர். இந்தியாவிலிருந்து சுரண்டிக்கொண்டு இங்கிலாந்துக்குப்போய் இந்தியா காட்டுமிராண்டிகள் கொள்ளைக்காரர்கள் வசிக்கும் நாடென்றும், உயிருக்குத் துணிந்தவர்களே அங்கு வியாபாரம் செய்ய முடியுமென்றும், பொய் பிரசாரம் செய்வது வழக்கம். அதனால் கிழக்கிந்திய கம்பெனி சிப்பந்திகளுக்கு இங்கிலாந்து மக்களின் ஆதரவு இயற்கையாய்க் கிடைத்துவந்தது.

**கிளைவ்:—** கிழக்கிந்திய கம்பெனி சரித்திரமும், கபடம் மோசடியின் சரித்திரமும் ஒன்று. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு அடிகோலியவன் கிளைவ். வாழ்க்கையை அலசிப் பார்க்கும்பொழுது அவன் முதல் தர கபடன், மோசக்காரன், பொய்பன், பித்தலாட்டக்காரனாக இருந்தானென்பது விளங்கும். பொய் தஸ்தாவேஜுகளைத் தயாரித்து மகாராஜ் குமார் நந்தசிங்கை தூக்கிலேற்றினான் தன் உபகாரியான சிராஜுத்தௌலாவை மோசடியால் கொலையுறும்படிச் செய்து ராணிகளை மானபங்கம் செய்தான். இங்கிலாந்துக்குத் திரும்பிய பிறகு தற்கொலை செய்து கொண்டது அவனுடைய செய்கைகளுக்குக்கிடைத்த பிரதிபலனேயாகும்.

**ஹேஸ்டிங்ஸ்:—** கிளைவின் வாரிசு. கிளைவை விட பெரிய நீசன். கிழக்கிந்திய கம்பெனியை ஆட்சி செலுத்தும் கம்பெனியாக மாற்றுவதற்கு திட்டமிட்டவன் அவனுடைய சூழ்ச்சிகள் வங்காளத்தில் ஏகாதிபத்தியத்தை பலப்படுத்தின மகாராஜா சீத் சிங்குடனும் அவத் ராணிகளுடனும் அவனுடைய ஒழுக்கக்கேடான நடத்தை வெட்கங்கெட்ட சாம்ராஜ்ய சரித்திரத்தின் வெட்கப்படத் தகுந்த பகுதியாகும்.

**காரன்வாலிஸ்:—** எந்த ஒரு இந்தியனுக்கும் கிளார்க்கைவிட பெரிய உத்தியோகம் கொடுக்கக் கூடாதென்று உத்திரவிட்டிருந்தவன். வங்காள விவசாயிகளை தன்னுடைய ஏஜெண்டுகளுக்கு நிரந்தர அடிமைகளாக்கினான். வங்காளத்தில் ஆங்கில ஆட்சியை பலப்படுத்துவதற்காக தேசத்துரோகிகளின் கும்பல் ஒன்றைத் திரட்டுவதைத் தவிர காரன்வாலிஸ் வங்காளத்தில் எடுத்த நடவடிக்கைகளுக்கு வேறு நோக்கமில்லை.

**வெல்லஸ்லி:—** சூழ்ச்சி செய்து பல பிரதேசங்களை ஆக்ரமித்தவன். இந்தியர்களை பரஸ்பரம் சிண்டு முடிந்துவிட்டு தன்னுடைய நோக்கங்களை பூர்த்தி செய்து கொண்டவன். உடன்படிக்கைகளை கவுரவித்து நடந்தவனல்ல. ஒப்பந்தங்களை அவன் லட்சியம் செய்ததில்லை, அவத் நவாபுக்கு சொந்தமான பெரிய பிரதேசத்தை ஒப்பந்தத்தையும் மீறி ஆக்ரமித்துக் கொண்டான் ஆங்கிலேய சூழ்ச்சிகளின் நிர்வாணக் கூத்துக்கு அதுதான் ஆரம்பம்.

**டல்ஹௌஸி:—** வெல்லெஸ்லியைவிட ஒரு படி அதிகம். ஒப்பந்தத்தைத் தூக்கி எறிந்துவிட்டு அவத் முழுவதையும் ஸ்வீகரித்தார். அதையடுத்து ஒன்றன் பின் ஒன்றாக இதர பிரதேசங்கள் விழுங்கப்பட்டன. நானா பர்னவிஸ் பீஷ்வாவின் உண்மையான வாரிசு. இருப்பினும் டல்ஹௌஸி ஏற்க மறுத்தது மட்டுமின்றி ஒப்பந்தத்துக்கு விரோதமாய் ஜான்ஸியை ஆக்ரமித்துக் கொண்டான். இந்தியா பூராவையும்

ஆக்ரமிக்கத் திட்டமிட்டிருந்தான். அவன் பஞ்சாபையும் விடவில்லை.

டல்ஹௌஸியின் கொள்கையால் இந்தியா ஒன்றுபட்டு சுதந்திரத்துக்காக போராட முதன் முதலாகத் தீர்மானித்தது. 1857-ல் தேசம் பூராவிலும் புரட்சி வேகம் பரவிற்று. கான்பூர், மீரத், டெல்லி முதலிய இடங்களில் சுதந்திர வீரர்களின் ஆதிக்கம் ஏற்பட்டது. ஆயினும் நூறு வருஷ சூழ்ச்சிகளால் இந்தியர்களிடையே போதுமான பிளவையுண்டாக்கி பெரிய எண்ணிக்கையில் திரட்டிவைத்திருந்த துரோகிகளின் உதவியைக்கொண்டு சுதந்திரக்கிளர்ச்சிக்காரர்களை அடக்குவதில் வெள்ளையர்கள் வெற்றி அடைந்துவிட்டனர்.

**கானிங்:—** ஆங்கில சரித்திரக்காரர்கள் கானிங்கை இரக்கமுள்ளவனென்று சொல்லுகின்றனர். ஆயினும் அவனுடைய போக்கு அவனுக்கு முன்னிருந்தவர்களின் போக்குக்கு மாறுபட்டிருந்ததா? பஹதூர்ஷாவுடன் ஏற்பட்ட ஒப்பந்தம் மீறப்படவில்லையா? அவனுடைய காலத்திலே டில்லி வீதிகளில் ராஜ வம்சத்தினர் அகவுரவிக்கப்படவில்லையா? இளவரசர்களைக் காட்டுமிராண்டித்தனமாய்க் கொன்றவர்கள் யார்? டில்லியில் ஐந்து அரசர்களை தூக்குமேடை ஏற்றியவன் எவன்?

## பஞ்சாப், சிந்து, பர்மா

பிறகு சிறிது காலம்வரை அமைதி நிலவிற்று. 1857 போராட்டத்தால் வெள்ளையன் அதிர்ச்சியடைந்திருந்ததே அதற்குக் காரணம். சாம்ராஜ்யத்தைப் பலப்படுத்துவதில் சில வருஷங்கள் கழிந்தன. ஐக்கிய மாகாணத்தில் ஜமீந்தாரித்துவத்தை ஏற்படுத்தி சுதந்திர நோக்கமுள்ளவர்களுக்கு எதிராக துரோகிகளின் கும்பல் உருவாக்கப்பட்டது. ராணுவத்தில் ஜாதிய மாகாண வேற்றுமைகளைப் புகுத்தி சிப்பாய்கள் பிரிக்கப்பட்டனர். இந்த வேலை முடிந்தபிறகு ஆக்ரமிப்புப் படலம் ஆரம்பமாயிற்று. பஞ்சாப், எல்லைப்புரம், சிந்து பிரதேசங்கள் ஒன்றன்பின் ஒன்ருக சூழ்ச்சியாலும் கபடத்தாலும் ஸ்வீகரிக்கப்பட்டன. பர்மா அரசரை மோசம் செய்து கொலை செய்வித்ததும் அவருடைய வம்சத்தினருக்கு தீங்கிழைத்ததும் அறியாதார் யாருமில்லை.

## காங்கிரஸ் ஸ்தாபிதம்

காங்கிரஸ் ஸ்தாபிதமானபோது ஆங்கிலேயர்களின் ஆக்ரமிப்பு வேலை பூர்த்தியடைந்திருந்தது. பூரா இந்தியாவையும், பர்மாவையும் வெள்ளையர்கள் ஆக்ரமித்துக்கொண்டிருந்தனர். ஆட்சியை நடத்துவதற்காக ஆட்கள் அவசியமாயிருந்தனர். பிரிட்டிஷ் சாம்ராஜ்ய யந்திரத்தை ஓட்டும் கூலிக்காரர்களைச் சேகரிப்பதற்கு ஆங்கிலக் கல்விமுறை அமுலுக்கு வந்தது. ஆங்கில ஆட்சியின் சிப்பந்திகள் நிம்மதியுடன் இருக்கவும் அவர்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையே பூரண ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கும் ஒரு ஆங்கிலேயன் காங்கிரஸை ஏற்படுத்த முடிவு செய்தான். அவனால் ஏற்படுத்தப்பட்ட அதே காங்கிரஸ் பிற்காலத்தில் சுதந்திரத்திற்காக போராடி பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் ஸ்தாபனமாக மாறிவிட்டது.

காங்கிரஸின் முதல் போராட்டம் 1914-ல் ஆரம்பமாயிற்று. பிறகு 1921-1930-ல் நடந்த போராட்டங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை. 1942-ல் காங்கிரஸில் இறுதிப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கையில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தலைமையில் இந்திய தேசிய ராணுவமும் கிழக்கிலிருந்து தாக்குதல் நடத்திற்று. முழு பலத்தையும் கொண்டு எதிர்த்தும் முடிவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தகர்ந்தே போய்விட்டது. கடைசி ஆங்கில கவர்னர் ஜெனரலும் இந்தியாவை விட்டு கிளம்பிவிட்டார்.

## ஆங்கிலேயர் செய்த நன்மை

"ஸ்கூல்கள், காலேஜ்கள் ஸ்தாபித்தனர். சாலைகள் அமைத்தனர் ரயில் பாதை போட்டனர். ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தினர். வாய்க்கால்கள் வெட்டினர். உத்தியோகங்கள் வழங்கினர்" என்றெல்லாம் ஆங்கிலேயரைப்பற்றி நாம் பள்ளியில் வாசிக்கும்போது உபாத்தியாயர் சொல்லக்கேட்டதுண்டு.

இவற்றையெல்லாம் இந்தியாவின் நன்மையை உத்தேசித்து ஆங்கிலேயர்கள் செய்தார்களா? கிளார்க்குகளின் படையைத் திரட்ட ஸ்கூல்கள், காலேஜ்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இல்லையேல் தேசியக் கல்வியை போதித்திருக்கலாமல்லவா? சிறு வயதிலிருந்தே பரஸ்பர வெறுப்பு உணர்ச்சியும், தாழ்மை, அடிமை மனப்பான்மையும் வளரும் வகையில் கல்வி போதிக்க ஏற்பாடாயிற்று. தங்கள் வியாபாரத்தைப் பெருக்கவே, மில்கள், சாலைகளை ஆங்கிலேயர்கள் அமைத்தனரேயொழிய இந்திய முன்னேற்றத்துக்காக அல்ல. சாலைகளின் கண்டிராக்டுகள் வெள்ளை கம்பெனிகளுக்கே விடப்பட்டன. டெலிபோன், டிராம்வே, கப்பல் கம்பெனிகள் அனைத்தும் பிரிட்டிஷ் கம்பெனிகளின் லாபத்தைக் கருதியே தோன்றின இந்தியாவுக்காக இருந்திருந்தால் இந்தியத்தொழில் வளர்ச்சியடைந்திருக்க முடியும். ஆங்கிலேயர்களின் இருநூறு வருஷ ஆட்சியில்






ரெஸாக்
ஓர் ஆர்ஜி தயாரிப்பு

ORJEE PRODUCTS,
VALANGAMAN. (S INDIA.)



பல சிறந்த
அலாரம் டைம்பீஸ்கள்



4½" டயல்
கைபிடியுடன் அழகிய கலர் கேஸ்
மிகவும் உறுதியாக தயாரிக்கப் பட்டவை.
ரூபா 30/-

ஜலால் & ஸன்ஸ்,
ராட்டன் பஜார், சென்னை.

கிளை ஸ்தாபனங்கள்
மவுண்டு ரோடு, சென்னை.
அபிட் ரோடு, ஐதராபாத் டெக்கான்.


இந்திய தொழில் துறையில் அடைந்த முன்னேற்றமென்ன? இந்தியர்களின் வாழ்க்கைத்தரம் எந்த அளவுக்கு உயர்ந்தது?

ஆங்கிலேயர்கள் இல்லாமலிருந்திருந்தால் ஆஸ்பத்திரிகள், காலேஜ்கள் ரயில்கள், கப்பல்கள் இல்லாமல் போயிருக்குமா? ஒவ்வொரு நாட்டிலும் புதிதாக கண்டு பிடிக்கப்படும் சாதனங்கள் இந்தியாவிலும் ஏற்பட்டிருக்குமென்பது நிச்சயம் சுதந்திரத்துடன் இருந்திருந்தால் திறமை வாய்ந்த இந்தியர்கள் இன்னும் அநேக புதிய சாதனங்களைக் கண்டு பிடித்திருக்கமுடியும். எனவே ஆங்கிலேயர்கள் இந்தியாவில் நவீன சாதனங்களை ஏற்படுத்தியது தங்களுடைய நன்மைக்கும் ஆட்சி நிலைத்திருக்கவுமேயாகும்

வெளியேற வேண்டிய கட்டம் வந்தபோது ஐக்கிய இந்தியாவால் தங்கள் ஏகாதிபத்தியத்துக்கு ஏற்படக்கூடிய அபாயத்தை எண்ணி நடுங்கிய வெள்ளையர்கள் வகுப்புவாத பூசலைக் கிளப்பிவிட்டு இந்தியாவைக் கூறு போட சூழ்ச்சிகள் செய்யலாயினர்.

1906-ல் தனித்தொகுதி கோரிக்கையை லார்ட் மிண்டோவிடம் சமர்ப்பிக்க ஸிம்லா சென்ற முஸ்லிம் தூது கோஷ்டி வைஸ்ராய் ஊட்டிய உற்சாகத்தின் மூலமே உருவாயிற்று தேசப் பிரிவினைக்குத் தனித்தொகுதியே பூர்வ பீடிகை. எனவே பாகிஸ்தான் எண்ணத்தை தோற்றுவித்தவர்களும் நாட்டைப் பிரித்தவர்களும் யார்?

கடைசியாக நாட்டை ஆபரேஷன் செய்ய வந்த டாக்டர் லார்ட் மவுண்ட் பேட்டனையும் இந்தியர்கள் அந்தரங்கசுத்தியுடன் வழியனுப்பினர். அது இந்தியாவின் பண்பாடு. இந்தியர்கள் அதை இழக்கமுடியாது. லார்டு மவுண்ட் பேட்டனும் என்ன செய்வார்! அவருடைய குற்றம் ஒன்றுமில்லை அவர் ஒழுக்கமுள்ளவர்தான். ஆயினும் இந்தியா துண்டாடப்பட்டதை இந்தியர்கள் மறக்கமுடியுமா? தன் அதிகாரத்தைப் பிரயோகித்து லாஹூரில் மார்ஷல் லா பிரகடனம் செய்திருந்தால் உடனே கலவரங்கள் அடங்கியிருக்கும். ஆயினும் லார்ட் மவுண்ட் பேட்டன் ஏன் அப்படிச்செய்யவில்லை என்று இந்தியர்கள் கேட்காமலிருக்கமுடியுமா?

Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, E. Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.